SRIRANGAM EDUCATIONAL SOCIETY, SRIRANGAM
NO: 2, Singer Koil Street, Srirangam
Tricuchirappalli - 620006.

## 125th Year Celebration (Quasquicentennial) 1896 - 2021.

### ஒரு அன்பான வேண்டுகோள்

ஸ்ரீரங்கநாயகித் தாயாருடன் அருள்புரியும் ஸ்ரீரங்கநாதர் மற்றும் ஸ்ரீஅகிலாண்டேஸ்வரியுடன் அருள்புரியும் ஜம்புகேஸ்வரரையும் காவிரிக்கு நடுவே கொண்டுள்ள ஸ்ரீரங்கத்தில், கடந்த 123 ஆண்டுகளாக கல்விச் சேவை புரிந்து வரும் ஸ்ரீரங்கம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வருகிற 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது 125ஆம் ஆண்டு விழாவினைக் கொண்டாடவுள்ளது. நம்முள்பலர் தொடக்க, உயர்நிலை / மேல்நிலை கல்வி பயின்ற பள்ளி, 1896ம் ஆண்டு தன்னலமற்ற, தொலைநோக்கு கொண்ட அபூர்வமான மனிதராகத் திகழ்ந்த உயர்திரு. வீரராகவாச்சாரியாரால் நிறுவப்பட்டது. இந்த நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இரண்டு பள்ளிகள் மட்டுமே ஸ்ரீரங்கத்தில் **‘ஸ்டேட் போர்டு’** படிப்பு அளிக்கும் உயர்நிலைப்பள்ளிகள்.

இந்த நிர்வாகத்தின் கீழ் ஆறு பள்ளிகள் உள்ளன.

| | | | பழைமை | |
|---|---|---|---|---|
| 1. | ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். | - | 123 ஆண்டுகள். | Govt. Aided School |
| 2. | பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். | - | 72 ஆண்டுகள். | Govt. Aided School |
| 3. | உயர்நிலைப்பள்ளி, திருவானைக்கோவில். | - | 102 ஆண்டுகள். | Govt. Aided School |
| 4. | கிழக்கு ரங்கா நடுநிலைப்பள்ளி, ஸ்ரீரங்கம். | - | 79 ஆண்டுகள். | Govt. Aided School |
| 5. | அரங்கநாயகி ஆரம்பப் பள்ளி, ஸ்ரீரங்கம். | - | 59 ஆண்டுகள். | Govt. Aided School |
| 6. | கலைவாணி மெட்ரிகுலேஷன் பள்ளி, ஸ்ரீரங்கம். | - | 39 ஆண்டுகள. | Self Financing School |

ஆண்கள் மேல் நிலைப் பள்ளி காலத்திற்கேற்ப பல மாற்றங்களையும் மேம்பாடுகளையும் கண்டது. முக்கியமாக 1996ஆம் ஆண்டு நூற்றாண்டு கொண்டாடிய போது நூற்றாண்டு நினைவு கட்டிடம் கட்டப்பட்டது. பிறகு 2010ம் ஆண்டு Dr. கமலம் நினைவு கட்டடமும், முன்னாள் மாணவர்கள் கணினி மையமும் கட்டப்பட்டது. இந்த பள்ளி வளாகத்தில் முதன் முதலாக 1914ல் உருவான ஒரு நூலகம் மற்றும் பதினான்கு வகுப்பறைகள் கொண்ட தரைத்தளத்தில் உள்ள கட்டிடமும், முதல் தளத்தில் உள்ள பழனியப்பா - சின்னையா Hallம்: பார்த்தசாரதி Hallம் 2014ம் ஆண்டு முறையாகச் செப்பனிடப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு இக்கட்டிடத்தின் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டது.

காலத்தின் தேவைக்கேற்ப BHSSல் 2017ல், 5KW Solar Panelம், GHSSல் *2018*ல் 6KW Solar Panelம் பொருத்தப்பட்டன. மாணவர்களின் நன்மைக்காகவும் பள்ளியின் பாதுகாப்பையும் கண்காணிக்க தேவையான இடங்களில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் CCTV கேமரா பொருத்தப்பட்டுள்ளது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு (4 & 5 தவிர) மற்ற பள்ளிகளில் இதுவரை மொத்தமாக 12 Smart Class Rooms (Audio/Visual Presentation) உருவாக்கப்பட்டுள்ளது. Digital Information Boardம் பயன் பாட்டில் உள்ளது. மாணவர்களின் வருகை மற்றும் நடத்தைகளை உடனுக்குடன் அவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்த SMS முறை பயன்படுத்தப்படுகிறது.

அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களின் அடிப்படைத் தேவையான கழிவறை தேவைக்கு ஏற்ப கட்டப்பட்டு முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் குடிநீருக்காக Bore well மூலம் சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது.

இத்தனை முன்னேற்றங்களும், அவைகளின் பராமரிப்பும், இந்த பள்ளியின் முன்னாள் மாணாக்கர்கள், நல்ல உள்ளம் கொண்ட பெரியவர்கள், மற்றும் சமூக பொறுப்புள்ள பெருநிறுவனங்களின் நன்கொடையாலும் நடைபெற்று வருகிறது என்பது தான் உண்மை.

**125ஆம் ஆண்டு நிறைவுக்கான புதிய கட்டிடம்:**

இந்த பள்ளி வளாகத்தில் 1938ஆம் ஆண்டு கட்டப்பட்டு, வெளியூர் மாணவர்கள் தங்க இடமும், உண்ண உணவும் கொடுத்து வந்த ‘Lakshmi Hostel’ மிகவும் பழுதடைந்து, ஆபத்தான நிலையில் இருந்ததை தொடர்ந்து மே 2019ல் முழுமையாக இடிக்கப்பட்டுவிட்டது.

நமது பள்ளி வருகிற 2021ஆம் ஆண்டு 125வது பள்ளி நிறுவன நாளை (1986 - 2021) கொண்டாட இருக்கின்றது. அச்சமயம் 'Lakshmi Hostel' இருந்த இடத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயன்பாட்டிற்காக ஒரு சிறந்த நவீன வசதிகளைக் கொண்ட Digital Library உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அதே இடத்தில் தன்னிறைவு கொண்ட Mini Audio Visual Hallம், விருந்தினர்கள் வரவேற்பறையும் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்குள் நுழைந்தவுடன் முதல் கட்டிடமாக திகழ இருக்கும் இந்த கட்டிடம் சிறப்பாக அமைய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் பழைய 'Lakshmi Hostel' ஐ நினைவு கூறும் வகையில் பழைய கல்வெட்டினை பெற்றிருக்கும். இக்கட்டிடம் சுமார் 100 அடி நீளமும் 50 அடி அகலம் கொண்டு 5000 சதுர அடி பரப்பில் 125ஆம் ஆண்டு நினைவு கட்டிடமாக அமையும். இக்கட்டிடம் கட்டவும் மற்றும் அதற்கு தேவையான மேஜை, நாற்காலிகள், கணினிகள், Audio Visual Equipments எல்லாவற்றிற்கும் ரூபாய் ஒரு கோடி செலவு ஆகும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

**முன்னாள் மாணாக்கர் பலர் (குறிப்பாக ஒரே வகுப்பில் ஒன்றாகப் பயின்ற பல குழுவினர்) பல வருடங்களுக்குப் பிறகு ஒன்று சேர்ந்து நம் பள்ளிக்கு வருகை தந்து தம்முடைய பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டு, தங்களை உருவாக்கிய ஆசிரியப் பெருமக்களை வணங்கி, கௌரவித்து, பள்ளிக்கு பொருளுதவி செய்யவும் முன் வந்துள்ளார்கள். இது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும்.**

**தாங்கள் படித்த, தங்களை நல்ல நிலைக்கு உயர்த்திய இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டவும், 125ஆம் ஆண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடவும் தாங்களும், தம் நண்பர்கள் மூலமும் தாராளமாக பொருளுதவி செய்து உதவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

நிதி அளிக்க விரும்புவோர் **Srirangam Educational Society** என்ற பெயரில் காசோலை அல்லது Demand Draft மூலம் அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி: **செயலர், Srirangam Educational Society, C/o. The Higher Secondary School for Boys, No.2, Singar Koil Street, Srirangam - 620006.** காசோலையின் பின்புறமோ அல்லது தனி தாளிலோ தங்கள் E-Mail முகவரி, தபால் முகவரி, தொலைபேசி மற்றும் அலைபேசி எண்ணையும் '125ஆம் ஆண்டு பள்ளி விழாவிற்காக' என்றும் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். தங்களுடைய முகவரிக்கு 80G வருமான வரிச் சலுகையுடன் கூடிய ரசீது அனுப்பிவைக்கப்படும்.
வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் செலுத்த / அனுப்பிவைக்க - **State Bank of India, Srirangam - 620006. SB a/c. no: 10465349505, Srirangam Educational Society, Srirangam. IFSC Code: SBIN0001983. Branch Code: 01983.** வங்கிகணக்கில் பணம் நேரடியாக செலுத்தப்பட்டால் தங்களுடைய முழு முகவரி, அலைபேசி எண், செலுத்தப்பட்ட தொகை ஆகிய விவரங்களை திரு.V.S.கிரி பொருளாளர் அவர்களுக்கோ அல்லது திரு.N. கஸ்தூரி ரங்கன் செயலர் அவர்களுக்கோ Email அல்லது whatsapp அல்லது SMS மூலம் தெரியப்படுத்தவும். விவரங்கள் கிடைத்தபின் 80 G வருமான வரிச்சலுகையுடன் கூடிய ரசீது அனுப்பிவைக்கப்படும்.

| Name | Position | E-mail Address | Whatsapp no |
|---|---|---|---|
| திரு.V.S.கிரி | பொருளாளர் | hiranyagiri@hotmail.com<br>HIRANYAGIRI@HOTMAIL.COM | **9894655365** |
| திரு.N.கஸ்தூரி ரங்கன் | செயலர் | kasturirangan.nrn@gmail.com<br>KASTURIRANGAN.NRN@GMAIL.COM | **9442243423** |
| ஸ்ரீரங்கம் எஜூகேஷனல் சொசைடி | ---- | srirangameducationalsociety@gmail.com<br>SRIRANGAMEDUCATIONALSOCIETY@GMAIL.COM | ---- |
| | | Web: **srirangamhighschool.weebly.com** | |

**ஸ்ரீரங்கம் எஜூகேஷனல் சொசைடியின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்**

தலைவர்: Dr. D. தேவதாஸ்
உபதலைவர்: திரு. K.V. ரங்கஸ்வாமி
செயலர்: திரு. N. கஸ்தூரி ரங்கன்
பொருளாளர்: திரு. V. S. கிரி
நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: திரு. K. ராகவேந்திரன், திரு. M.S. நந்தகுமார், செல்வி. S. சத்யபாமா.

N. கஸ்தூரி ரங்கன்
செயலர்
ஸ்ரீரங்கம் எஜூகேஷனல் சொசைடி
ஸ்ரீரங்கம்.

20 செப்டம்பர் 2019
ஸ்ரீரங்கம்.